**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | CC. No.149/2025 | அரசுதரப்பு சாட்சி P.W.7 |
| பெயர் | நல்லதம்பி (மோட்டார் வாகன ஆய்வாளர்) | கிராமம் |
| தந்தை பெயர் | | வட்டம் |
| வயது | | மாவட்டம் |

Solemnly affirmed by Thirumathi.kanimozhi, Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 14.07.2026
As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.
எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.
சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நிலை I மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.02.2025ம் தேதி மாலை 04.10 மணிக்கு நான் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை I ஆக பணியில் இருந்த போது கணேஷ் நகர் வட்டகாவல் ஆய்வாளர் அவர்கள் வல்லாத்திரக்கோட்டை காவல்நிலைய குற்ற எண் 16/2025 BNS சட்டப்பிரிவுகள் 281, 125(a), 106(1) வழக்கில் விபத்துக்குள்ளான Honda Duo பதிவு எண் TN 55 BQ 6431என்ற வாகனத்தை ஆய்விற்கு அனுப்பியிருந்ததை நான் ஆய்வு செய்த போது அந்த வாகனத்திற்கு எந்தவித சேதமும் ஏற்பட்டிருக்கவில்லை. மேற்படி விபத்து அந்த வாகனத்தின் இயந்திரகோளாறினால் ஏற்பட்டிருக்கவில்லை என்று கருத்துகூறி சான்று வழங்கியுள்ளேன். மேற்படி வாகனத்திற்கு நான் வழங்கியுள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ- 4. இந்த வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான பதிவு எண் TN 55 AH 9463 AVM தனியார் பேருந்தை ஆய்வு செய்து பார்த்ததில்

மேற்படி பேருந்து வாகனத்திற்கும் எந்த சேதமும் ஏற்பட்டிருக்கவில்லை. மேற்படி விபத்து அந்த வாகனத்தின் இயந்திரகோளாறினால் ஏற்பட்டிருக்கவில்லை என்று கருத்துகூறி சான்று வழங்கியுள்ளேன். மேற்படி வாகனத்திற்கு நான் வழங்கியுள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ-5. இருசக்கர வாகனத்தின் பின்புறமாக பொருத்தப்பட்டுள்ள கார்டு பாதுகாப்பு கம்பி வளையத்தில் பேருந்து போன்ற கனரக வாகனம் ஓடும் நிலையில் மோதும் சமயத்தில் அந்த கம்பிக்கோ பேருந்துக்கோ சேதம் ஏற்பட வாய்ப்பில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

மேற்படி இருவாகனங்களையும் ஓட்டி பார்த்த நிலையில் தான் நான் சான்று வழங்கினேன்.

Sd/–நல்லதம்பி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**